**Minutes of the Public Hearing held on 26.11.2020 at 12.00 Noon at Mahatma Gandhi College of Education, Rajapalayam Main Road, V.R.Naidu Nagar, Solaiseri, Sankarankovil Taluk, Tenkasi District with respect to the Project of "M/s. Murali Enterprises, Pandapuli existing Limestone Mines,S.F.No. 24/1C(P), 24/2(P), 30/2 to 30/8 & 34/15 (Extent of 2.37.25 Ha), Pandapuli Village, Sankarankovil Taluk, Tenkasi District."**

**Presents:-**

| | | | |
|---|---|---|---|
| 1. | Tmt. A. E. Kalpana | - | District Revenue Officer, Tenkasi District. |
| 2. | Tmt. C. Suyambuthangarani | - | District Environmental Engineer (a/c), Tamil Nadu Pollution Control Board, Tirunelveli. |
| 3. | Public Participation and other Government Officials | - | (Copy of Attendance enclosed) Annexure-1 |

---000---

The Public Hearing for this project of M/s. Murali Enterprises, S.F. No. 24/1C(P), 24/2(P), 30/2 to 30/8 & 34/15 (Extent of 2.37.25 Ha) of Pandapuli Village, Sankarankovil Taluk, Tirunelveli District was followed immediately after the public hearing for adjoining project of M/s. Murali Enterprises held on 26.11.2020 at 10.30 a.m.

The District Revenue Officer, Tenkasi District has requested the public to register their views only with respect to quarry operations.

**1. Thiru. Nagarajan, Pandapuli**

He said that, I am 55 years old and I have been working from the age of 18 years since river sand mining took place. He also said that he has agriculture and people are coming from various villages for quarry work. Further, he expressed that there are about 500 employees depend on this quarry and livelihood of these people will be in question especially in the corona season. He also expressed that companies use to give job opportunities to the people under the age of 35 and hence quarries alone give job opportunities to the people like me. He said that there are more than 400 houses in Pandapuli village not doing agriculture here and asked questions to the gatherings.

The District Revenue Officer, Tenkasi District intervened and requested him not to raise questions but to express / register his views.

Further, Thiru. Nagarajan expressed that this quarry is to be given permission for the livelihood of 500 families.

2. **Thiru. S. Suryakumar, Consultant of M/s. Murali Enterprises**

Power point presentation made by the Consultant of M/s. Murali Enterprises before the gatherings about the project in respect of location of the project, activities to be carried out at the project site, the safety and environmental precautions to be adopted etc.

3. **Thiru. Kamalakannan, Pandapuli**

He expressed that he has been working in the quarry for the last 20 years and his family depends on the quarry and requested for the operation of the quarry.

4. **Thiru. Kumar – Pandapuli**

He said that there will be employment throughout the years in the quarry for the livelihood of people, children's education etc. He also said that there is no connection between agriculture, quarry and the pond so that it will be good for the people if permission is granted to the quarry operation.

5. **Thiru. Kanthasamy – Pandapuli**

He said that his father name is Thiru. Gurusamy and has been working in the quarry for the last 15 years. He also said that there is no connection between the quarry and the pond. Further, he expressed that they have been suffering without employment and hence requested to make the quarry into operation.

6. **Thiru. Arumugam – Pandapuli**

He said that he is doing coolie work so that he wanted the quarry to be run.

7. **Thiru. Manivelan – Pandapuli**

He expressed that people in the nearby villages had been working in the quarry so that he wanted the quarry to be run.

8. **Tmt. Paul Pasumathi**

She expressed that livelihood of her family depends on the quarry so that she wanted the quarry to be run.

Also there were 3 representation received towards the project as follows:

1. **Thiru. H. Madhubabu, President (REEHAS), Rural Environment Education and Health Awareness Society),Hyderabad through e-mail date 28.11.2020.**

   a. He informed that data regarding health status of the public within 10 km radius and crop production details from nearby agricultural lands may be added in the Final EIA Report.

b. He informed to provide rain water harvesting facility to store the rain water, which may be used for plantation, to control dust emanation during its operation.

c. He informed to provide employment opportunities to the youngsters, medical facility, drinking water, education and village roads to the villagers.

d. He informed to contribute additional revenue to the State and Central Government.

e. Further, he informed to form a committee comprising villagers, officials from industry & Government officials to take up plan of action of CSR activities.

2. **Petition dated 26/11/2020 received in O/o DEE, TNPCB, Tirunelveli from Thiru. P. Sakthivel on behalf the public of Pandapuli Village**

It was stated that M/s. Murali Enterprises (Lime stone quarry) has been in operation for the last 30 years and stopped its operation 3 years back so that livelihood of villagers got affected. It was also stated that the villagers can have life only if the quarry resumed its operation. Further, it was stated to provide drinking water, toilet facility and renovation of Pandapuli pond out of income from the quarry.

3. **Petition dated 26/11/2020 received from Tmt. K. Sankaralakshmi, P. Reddiapatti during public hearing meeting: (Patta Copy is attached)**

a. It was stated that there is no water for cultivation in S.F. No. 105/3, 4A, 6, (0.95.5 Acre) Pandapuli Village, Sankarankovil Taluk, Tenkasi District.

b. It was stated that she is not able to do cultivation as the pond is to be renovated.

c. Further, it was stated to provide water with renovating the pond.

Finally the meeting came to an end with the vote of thanks delivered by the District Environmental Engineer (a/c), TNPCB, Tirunelveli.

District Environmental Engineer (a/c)
Tamilnadu Pollution Control Board
Tirunelveli

30.11.20
District Revenue Officer
Tenkasi District

**தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பந்தப்புளி கிராமம், புல எண்கள். 24/1C பகுதி, 24/2 பகுதி, 30/2 முதல் 30/8 வரை மற்றும் 34/15 (2.37.25 ஹெக்டேர் பரப்பளவு) அமைந்துள்ள திி/ள். முரளீ நிறுவனங்கள், "நடைமுறையில் இருந்த பந்தப்புளி சுண்ணாம்புக்கல் சுரங்கம்" திட்டம் குறித்து 26.11.2020 அன்று நண்பகல் 12.00 மணியளவில் தென்காசி மாவட்டம், சங்கரன் கோவில் வட்டம், சோலைச்சேரி, வி.ஆர். நாயுடு நகர், ராஜபாளையம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள மகாத்மா காந்தி கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நிகழ்வின் சுருக்கம்:-**

**இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்:**

| | | |
|---|---|---|
| 1. திருமதி. A.E. கல்பனா | – | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>தென்காசி மாவட்டம். |
| 2. திருமதி. செ. சுயம்புதங்கராணி | – | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ),<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. |
| 3. பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் | – | விபரம் இணைக்கப்பட்டுள்ளது.<br>(இணைப்பு – 1) |

---000---

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பந்தப்புளி கிராமத்தில், சுண்ணாம்புக்கல் சுரங்கம் அனுமதி அளிப்பது தொடர்பாக 26.11.2020 அன்று காலை 10.30 மணிக்கு மகாத்மா காந்தி கல்வியியல் கல்லூரி, சோலைசேரியில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை தொடர்ந்து அதே இடத்தில் சங்கரன்கோவில் வட்டம், பந்தப்புளி கிராமத்தில் புல எண்கள். 24/1C பகுதி, 24/2 பகுதி, 30/2 முதல் 30/8 வரை மற்றும் 34/15 (2.37.25 ஹெக்டேர் பரப்பளவு) உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் தொடர்ந்தது.

மாவட்ட வருவாய் அலுவலர், தென்காசி மாவட்டம் அவர்கள் திட்டம் பற்றிய பொதுமக்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைக்கத் தொடங்கினார்கள். அவை பின்வருமாறு:

1. **திரு. நாகராஜன் – பந்தப்புளி**

எனக்கு 55 வயதாகிறது. 18 வயதிலிருந்து வேலை பார்த்து வருகிறேன். ஆற்றுமணல் குத்தகை கொடுத்த காலத்திலிருந்து வேலை பார்க்கிறேன். எனக்கும் விவசாயம் உள்ளது. பல்வேறு கிராமங்களிலிருந்தும் குவாரிக்கு வேலை செய்ய வருகின்றனர். இக்குவாரியை நம்பி 500 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இக்குவாரி இல்லையென்றால் அந்த 500 தொழிலாளர்களின் நிலைமை, வாழ்வாதாரம் என்னவாகும். இது கொரனா காலம் என்பதால் மக்களின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. 35 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும்தான் மில் நிர்வாகம் வேலைக்கு எடுக்கின்றது. என்னை மாதிரி 35 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு இந்த குவாரிதான் வேலை கொடுக்கிறது. விவசாயம் இல்லாததால் இந்த குவாரிதான் எங்களுக்கு வாழ்வாதாரம். இந்த பந்தப்புளி கிராமத்தில் 400 வீடுகளுக்கு மேல் உள்ளது, யாருமே விவசாயம் செய்யவில்லை எனவும் குறிப்பிட்டு கேள்விகளை எழுப்பினார்.

எனவே, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் குறுக்கிட்டு கேள்வி எதுவும் கேட்க வேண்டாம் தங்கள் கருத்துக்களை மட்டும் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்படி, திரு. நாகராஜன் இந்த குவாரிக்கு கண்டிப்பாக உரிமம் வழங்க வேண்டும் எனவும், உரிமம் வழங்கினால் 500 குடும்பங்களின் வாழ்வாதாரம் நன்றாகயிருக்கும் என்று கேட்டு கொண்டார்.

2. திரு. S. சூர்யகுமார், திட்ட ஆலோசகர், தி/ள். முரளீ நிறுவனம்

இத்திட்டம் குறித்த விளக்கங்களை தி/ள். முரளீ நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் மக்களுக்கு விளக்கினார்.

3. திரு. கமலக்கண்ணன் – பந்தப்புளி

நான் 20 வருடமாக குவாரியில் வேலை செய்து வருகிறேன். என்னுடைய குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறது. இக்குவாரியை நம்பி தான் என்னுடைய குடும்பம் உள்ளது. எனவே இக்குவாரியை திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

4. திரு. குமார் – பந்தப்புளி

நான் 5 வருடமாக பனை தொழில் செய்து வருகிறேன். குவாரிக்கும் என்னுடைய தொழிலுக்கும் சம்பந்தம் இல்லை. இக்குவாரியில் அனைத்து காலங்களிலும் தொடர்ந்து வேலை இருக்கும். மழை பெய்தாலும், வெயில் அடித்தாலும் இக்குவாரியில் வேலை இருக்கும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் மக்கள் தொடர்ந்து வேலை பார்த்து வந்தார்கள். இதனால் எங்களுடைய அன்றாட தேவைக்கும், எங்கள் குழந்தைகளின் படிப்பு செலவிற்கும் பயன்படும் வகையில் இருக்கும். விவசாயத்திற்கும், குவாரிக்கும் கண்மாயிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

5. திரு. கந்தசாமி – பந்தப்புளி

என்னுடைய தகப்பனார் பெயர் குருசாமி. கண்மாயிக்கும், குவாரிக்கும் சம்பந்தமில்லை. 15 வருடங்களாக இந்த குவாரியில் வேலை பார்த்தேன். வேலை இல்லாமல் திண்டாடுகிறோம். எனவே இந்த குவாரியை அமைத்து தருமாறு கேட்டுக் கொண்டார்.

6. திரு. ஆறுமுகம் – பந்தப்புளி

எனக்கு கூலி வேலைதான். எனவே இக்குவாரி வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

7. திரு. மணிவேலன் – பந்தப்புளி

இக்குவாரியில் தான் சுற்றுவட்டாரப்பகுதியில் உள்ள கிராமங்களிலிருந்து மக்கள் வேலைக்கு வருகின்றார்கள். எனவே இக்குவாரி வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

8. திருமதி. பால்பசுமதி

இக்குவாரியை வைத்து தான் என்னுடைய குடும்பத்தின் அன்றாட தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். இக்குவாரி இல்லாததால் எங்களுடைய குழந்தைகளின் படிப்பு

செலவையும் மேற்கொள்ள முடியவில்லை. எனவே குவாரி வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

<u>இத்திட்டத்தை குறித்து பெறப்பட்ட மூன்று மனுக்களின் விபரம் வருமாறு:</u>

1. <u>திரு. ஹெச். மது பாபு, தலைவர், ரிகாஸ், முஷிராபாத், ஹைதராபாத் 28/11/2020 தேதியில் மின் அஞ்சல் மூலம் தனது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:</u>
   a) 10 கி.மீ சுற்றளவில் வசிக்கும், மக்களின் உடல்நிலை மற்றும் அருகாமையில் உள்ள விவசாய நிலங்களின் பயிர் உற்பத்தி பற்றிய அறிக்கையை சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் சேர்த்துக் கொள்ள அறிவுறுத்தியுள்ளார்.
   b) மேலும் நீர் சேமிப்பு முறையை பின்பற்றவும், அதனால் தொழிற்சாலைக்கு தேவையான நீரை அதன் மூலம் நிறைவேற்றவும் அதிக மரங்களை வளர்க்கவும், அருகிலுள்ள கிராமங்கள் மற்றும் சாலைகளில் மரங்கள் வளர்க்கவும் அதன் மூலம் தூசியை கட்டுபடுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.
   c) மேலும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, கிராம மக்களுக்கு மருத்துவ உதவி, குடிநீர், கல்வி, கிராமப்புற சாலைகள் முதலியன ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.
   d) இத்திட்டத்தால் மத்திய மாநில அரசுகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க ஆவண செய்யுமாறு தெரிவித்தார்.
   e) மேலும் தொழிற்சாலை அலுவலகர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் கிராம மக்களைக் கொண்டு ஒரு குழு அமைத்து அதன்மூலம் பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு (CSR) கீழ் உள்ள நிதியை கிராமங்களுக்கு தேவையான திட்டங்களை நடைமுறைப்படுத்த கேட்டுக்கொண்டுள்ளார்.

2. <u>திரு. சக்திவேல் மற்றும் பந்தப்புளி ஊர் பொதுமக்கள் சார்பாக இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட மனு நாள் 26.11.2020.</u>

இந்த மனுவில் தி/ள். முரளீ நிறுவனம், சுண்ணாம்புக்கல் சுரங்கம் கடந்த 30 வருடங்களாக இயங்கி வந்த நிலையில், கடந்த மூன்று வருடங்களாக இயங்கவில்லை. இந்த கிராமத்திற்கு வாழ்வாதாரமாக இருந்த இந்த சுண்ணாம்பு சுரங்கம் இயங்காததால் வருமானமின்றி கஷ்டப்படுவதாகவும் குவாரி இயங்கும் பட்சத்தில் மட்டுமே வாழ்க்கை நடத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். மேலும் குவாரி இயங்குவது மூலம் அரசுக்கு கிடைக்கும் வருவாயை கிராமத்தின் அடிப்படை தேவையான குடி தண்ணீர், கழிப்பறை வசதி மற்றும் பந்தப்புளி கம்மாயை குடிமராத்து பணி செய்து கம்மாய்க்கான நீர் வழி ஆதாரங்களை சீரமைத்து கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் திருமதி. கி. சங்கரலட்சுமி, P . ரெட்டியப்பட்டி சங்கரன்கோவில் வட்டம், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் அளித்த 26/11/2020 தேதியிட்ட மனுவின் விபரம். (நில ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது)

a) பந்தப்புளி கிராமம், புல எண்கள் 105/3, 4A, 6 உள்ள இடத்தில் நெல் சாகுபடி செய்வதற்கு தேவையான தண்ணீர் வசதி இல்லை என்பதாக தெரிவித்துள்ளார்.

b) மேலும் அருகில் உள்ள குளத்தில் மடை அடைக்கப்பட்டு சீரமைப்பு பணி இல்லாத நிலையில் விவசாயம் செய்ய இயலவில்லை என்பதாக தெரிவித்துள்ளார்.

c) எனவே மேற்படி நிலங்களில் விவசாயம் செய்வதற்கு குளங்களை சீரமைத்து தேவையான தண்ணீர் பெறுவதற்கு ஆவண செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ) நன்றி கூற, கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூ/பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி.

மாவட்ட வருவாய் அலுவலர்,
தென்காசி மாவட்டம்.